# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# மூன்றாம் பத்து

## ஐந்தாம் திருமொழி - வந்துனது
## திருவாலி 1

** வந்துனது அடியேன் மனம் புகுந்தாய் * புகுந்ததற் பின் வணங்கும் * என்
சிந்தனைக்கு இனியாய்! * திருவே! என் ஆருயிரே! **
அந்தளிர் அணியார் * அசோகின் இளந்தளிர்கள் கலந்து * அவை எங்கும்
செந்தழல் புரையும் * திருவாலி அம்மானே! 1

நீலத் தட வரை * மாமணி நிகழக் கிடந்தது போல் * அரவணை
வேலைத் தலைக் கிடந்தாய்! * அடியேன் மனத்து இருந்தாய்! **
சோலைத் தலைக் கண மாமயில் நடம் ஆட * மழை முகில் போன்று எழுந்து * எங்கும்
ஆலைப் புகை கமழும் * அணியாலி அம்மானே! 2

நென்னல் போய் வரும் என்றென்று எண்ணி இராமை * என் மனத்தே புகுந்தது *
இம்மைக்கு என்றிருந்தேன் * எறி நீர் வளம் செறுவில் **
செந்நெல் கூழை வரம்பொரீஇ * அரிவார் முகத்தெழு வாளை போய் * கரும்பு
அந்நற் காடணையும் * அணியாலி அம்மானே! 3

மின்னின் மன்னு நுடங்கிடை * மடவார் தம் சிந்தை மறந்து வந்து * நின்
மன்னு சேவடிக்கே * மறவாமை வைத்தாயால் **
புன்னை மன்னு செருந்தி * வண்பொழில்வாய் அகன் பணைகள் கலந்து * எங்கும்
அன்னமன்னும் வயல் * அணியாலி அம்மானே! 4

நீடு பல் மலர்மாலை இட்டு * நின் இணையடி தொழுது ஏத்தும் * என் மனம்
வாட நீ நினையேல் * மரம் எய்த மாமுனிவா! **
பாடல் இன்னொலி சங்கின் ஓசை பரந்து * பல்பணையால் மலிந்து * எங்கும்
ஆடல் ஓசை அறா * அணியாலி அம்மானே! 5

கந்த மாமலர் எட்டும் இட்டு * நின் காமர் சேவடி கை தொழுதெழும் *
புந்தியேன் மனத்தே * புகுந்தாயைப் போகல் ஒட்டேன் **
சந்தி வேள்வி சடங்கு நான்மறை * ஓதி ஓதுவித்து ஆதியாய் வரும் *
அந்தணாளர் அறா * அணியாலி அம்மானே! 6

உலவு திரைக் கடல் பள்ளி கொண்டு வந்து * உன் அடியேன் மனம் புகுந்த * அப்
புலவ! புண்ணியனே! * புகுந்தாயைப் போகல் ஒட்டேன் **
நிலவு மலர்ப் புன்னை நாழல் நீழல் * தண்தாமரை மலரின் மிசை * மலி
அலவன் கண் படுக்கும் * அணியாலி அம்மானே! 7

சங்கு தங்கு தடங்கடல் * கடல் மல்லையுள் கிடந்தாய்! * அருள் புரிந்து
இங்கு என்னுள் புகுந்தாய்! * இனிப் போயினால் அறையோ! **
கொங்கு செண்பக மல்லிகை மலர் புல்கி * இன்னிள வண்டு போய் * இளந்
தெங்கின் தாதளையும் * திருவாலி அம்மானே! 8

ஓதி ஆயிர நாமமும் பணிந்து ஏத்தி * நின் அடைந்தேற்கு * ஒரு பொருள்
வேதியா! அரையா! * உரையாய் ஒரு மாற்றம் எந்தாய்! **
நீதி ஆகிய வேத மாமுனியாளர் * தோற்றம் உரைத்து * மற்றவர்க்கு
ஆதியாய் இருந்தாய்! * அணியாலி அம்மானே! 9

** புல்லி வண்டறையும் பொழில் புடை சூழ் * தென்னாலி இருந்த மாயனை *
கல்லின் மன்னு திண்தோள் * கலியன் ஒலி செய்த **
நல்ல இன்னிசை மாலை * நாலும் ஓர் ஐந்தும் ஒன்றும் நவின்று தாம் * உடன்
வல்லராய் உரைப்பார்க்கு * இடம் ஆகும் வான் உலகே 10

**அடிவரவு:** வந்து நீல நென்னல் மின்னின் நீடு கந்தம் உலவு ஸங்கு ஓதி புல்லி தூவிரிய

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---